1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி மேம்படுத்தப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கு நவகத்தேகம பிரதேச சபையினால் எடுக்கப்பட்ட சபைக் கூற்றிற்கு புத்தளம் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடத்தில் கிடைக்கப் பெற்ற அனுமதிப்படி மற்றும் உரியச் சட்டத்தில் 146 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவு மேம்படுத்தப்பட்ட பிரதேசமாக 2019.04.26 ஆந் திகதி 2121 ஆம் இலக்கத்திற்கான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் சொத்துக்களில் இருந்து 2020 ஆம் ஆண்டு உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சர் அவர்களது அனுமதிக்கு அமைய மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டு பெறுமதியினை ஏற்றுக் கொள்வதற்கும், உரிய பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி, உரிய சொத்தின் மீது நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவில் மேம்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லா நிலையான சொத்துக்களது ஆண்டு பெறுமதியில் 6% மதிப்பீட்டு வரி 2023 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடுவதற்கு மற்றும் அம் மதிப்பீட்டு வரி உரிய பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் பிரிவின் சட்டத்திட்டங்களுக்கு அமைய உரிய ஆண்டில் மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைகின்ற 4 காலாண்டுகளினுள் சமமாக 4 தவணைகளில் செலுத்துமாறு கட்டளையிடுவதற்கும் நவகத்தேகம பிரதேச சபை பிரேரணை விடுக்கின்றது.

ருவன்வல்லை பிரதேச சபை

ஆதன வரி விதித்தல் - 2023

ருவன்வல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ - 19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில்,

அ) *146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசம் /பிரதேசங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம் /பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் மீதும் 2022 ஆம் ஆண்டில் வலுவிலிருந்த வருடாந்த மதிப்பீட்டினை 2022 ஆம் வருடத்திற்கான மதிப்பீடாக ஏற்றுக்கொள்வதற்கு,*

ஆ) *134 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லையை அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு பிரதேசம் /பிரதேசங்களாக ருவன்வெல்லை நகர எல்லை அதிகாரப் பிரதேசத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 07 வரையிலான பிரிவுகளில் அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் ஏழு வீதம் (7%) ஆதன் வரியினையும், கலப்பிட்டமட, கோனகல்தெனிய, அமிதிரகல, கன்னத்தோட்டை போன்ற முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் நான்கு வீத (4%) ஆதன வரியையும்,*

இ) *134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள குறித்த வருடாந்த ஆதன வரி 2023 மார்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவடைகின்ற நான்கு காலாண்டுகளினும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்தப்படுதல் வேண்டுமென கட்டளையிடுவதற்கும் ருவன்வல்லை பிரதேச சபை முன்மொழிகின்றது.*

ஈ) *2023 ஆம் வருடத்திற்கான மொத்த ஆதன வரித் தொகையினை 2023 ஆம் வருடம் சனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் குறித்த மொத்த ஆதன வரித்தொகையின் பத்து வீத (10%) கழிவும், அந்தந்த காலாண்டிற்கும் உரிய ஆதன வரியினை அந்தந்த காலாண்டின் முதல் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்துமிடத்து ஐந்து வீத 05% கழிவும் செலுத்தப்படும்.*

அட்டவணை

காலாண்டு	*செலுத்த வேண்டிய திகதி*	*5% கழிவு கிடைப்பதற்காக செலுத்த வேண்டிய இறுதித் திகதி*
முதலாம் காலாண்டு	*2023.01.01 - 2023.03.31*	*2023.01.31*
இரண்டாம் காலாண்டு	*2023.04.01 - 2023.06.30*	*2023.04.30*
மூன்றாம் காலாண்டு	*2023.07.01 - 2023.09.30*	*2023.07.30*
நான்காம் காலாண்டு	*2023.10.01 - 2023.12.31*	*2023.10.31*

12- 244/1

ருவன்வல்லை பிரதேச சபை

ஏக்கர் வரி விதித்தல் - 2023

ருவன்வல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ-19 இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில்,

அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏக்கர் வரிக்கு உற்படுகின்ற அனைத்துக் காணியினதும் 2022 ஆம் ஆண்டில் வலுவிலிருந்த சரிபார்த்தலை 2023 ஆம் வருடத்திற்கான சரிபார்த்தலாக ஏற்றுக்கொள்வதற்கு,

ஆ) 134 ஆம் பிரிவின் (3) உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறித்த உப பிரிவின் முதலாம் துணைக் கட்டளையின் கீழ் 1989.03.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் ஏக்கர் வரியினை விதித்தல் மற்றும் அறவிடும் விடயத்திற்காக உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் விசேட பிரதேசமொன்றாகக் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஹெக்டயாரிற்குக் குறையாத இருந்தும் ஐந்து ஹெக்டயார்களுக்குக் குறைந்த அனைத்துக் காணிகள் மீதும் ரூபா ஐம்பது (50.00) அளவிளான ஏக்கர் வரியினை மற்றும் 05 ஹெக்டயார்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து காணிகளில் அனைத்து ஹெக்டயார் மீதும் ரூபா பத்து (10.00) அளவிலான ஏக்கர் வரியொன்றினை 2023 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடுவதற்கு மற்றும்,

இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வரியினை 2023 ஆம் வருடத்தின் மார்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவடைகின்ற நான்கு காலாண்டுகளினும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்தப்படுதல் வேண்டுமென கட்டளையிடுவதற்கும் ருவன்வல்லைப் பிரதேச சபை முன்மொழிகின்றது.

ஈ) 2023 ஆம் வருடத்திற்கான மொத்த ஆதன வரித் தொகையினை 2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் குறித்த மொத்த ஆதன வரித்தொகையின் பத்து வீத (10%) கழிவும், அந்தந்த காலாண்டிற்கும் உரிய ஆதன வரியினை அந்தந்த காலாண்டின் முதல் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செழுத்துமிடத்து ஐந்து வீத 05% கழிவும் செலுத்தப்படும்.

அட்டவணை

காலாண்டு	*செலுத்த வேண்டிய திகதி*	*5% கழிவு கிடைப்பதற்காக செலுத்த வேண்டிய இறுதித் திகதி*
முதலாம் காலாண்டு	*2023.01.01 - 2023.03.31*	*2023.01.31*
இரண்டாம் காலாண்டு	*2023.04.01 - 2023.06.30*	*2023.04.30*
மூன்றாம் காலாண்டு	*2023.07.01 - 2023.09.30*	*2023.07.30*
நான்காம் காலாண்டு	*2023.10.01 - 2023.12.31*	*2023.10.31*

ருவன்வல்லை பிரதேச சபை

வாகனங்கள் மற்றும் விலங்குகளுக்கான வரி விதித்தல் - 2023

ருவன்வல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ- 19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளின் மூலம் பிரதேச சபைகளுக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் ருவன்வல்லை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 2023 ஆம் வருடத்தில் கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு வாகனம் அல்லது விலங்கினை தமது உடமையாக வைத்துக்கொள்ளும் அனைத்து நபர்கள் மீதும் குறித்த அட்டவணையில் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள வரியொன்றினை 2023 ஆம் வருடத்தில் விதித்து அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன்.

அட்டவணை

I ஆம் நிரல்	*II ஆம் நிரல்*
	ரூபா சதம்
ஒரு மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் ட்ரைகார், ஒரு மோட்டார் லொறி, ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு வண்டில், ஒரு ரிக்ஷோ, ஒரு துவிச்சக்கர வண்டி அல்லது ஒரு ட்ரைசிகள் அல்லாத அனைத்து வாகனங்களிற்காகவும்:	*25.00*
அனைத்து துவிச்சக்கர வண்டிகள் அல்லது ட்ரைசிகள் அல்லது பைசிகள் கார் அல்லது வண்டில்களிற்காக	
(அ) வியாபார நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுவதாயின்	*18.00*
(ஆ) வியாபார நடவடிக்கைகள் அல்லாத விடயங்களிற்காக உபயோகிக்கப்படுவதாயின்	*4. 00*
அனைத்து வண்டில்களிற்காக	*20.00*
அனைத்து கை வண்டில்களிற்காக	*10.00*
அனைத்து ரிக்ஷோக்களிற்காக	*7. 50*
அனைத்து குதிரை, போனி அல்லது கழுதை	*15.00*
அனைத்து யானைகளிற்காக	*50.00*

விட்டம் 26 அங்குலங்களை விடக் கூடாத சில்லுகளையுடைய குழந்தை வாகனங்கள், வீல்பரோ தனியார் இடங்களில் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துகின்ற கை வண்டில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாத கை வண்டில்கள் இவ்வரியிலிருந்து விளக்களிக்கப்படும்.

இவ்வட்டவணையில் "வியாபார விடயம்" என்பதற்கு, விற்பனைக்காக அல்லது வேறு விதமாக அல்லது ஏதேனும் வர்த்தக வியாபாரம் இல்லையேல் கைத்தொழிலிற்கான ஏதேனும் ஒரு திரவியம் அல்லது பொருள் அல்லது ஏதேனும் எழுத்து மூலமான இல்லையேல் பிரசுரிக்கப்பட்ட திரவியங்களை எடுத்துச் செல்லல் அல்லது போக்குவரத்து செய்தல் உள்ளடக்கப்படுகின்றது.

ருவன்வல்லை பிரதேச சபை

அனுமதிப்பத்திரக் கட்டணங்களை விதித்தல் - 2023

ருவன்வல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ - 19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ருவன்வல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எவையேனும் ஒரு கைத்தொழிலை 2023 ஆம் வருடத்தில் மேற்கொள்வதற்காக வழங்கப்படுகின்ற ஏதேனும் அனுமதிப்பத்திரம் மீது குறித்த கைத்தொழிலை மேற்கொள்கின்ற வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு எல்லைக்குள் இருக்கும் சந்தர்ப்பத்தில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் பிரகாரமான அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றை விதித்து அறவிடுதல் வேண்டுமென ருவன்வல்லை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

மேலும், குறித்த இடம் அல்லது வளாகம் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலாச் சபைச் சட்டத்தில் விடயங்களிற்காக சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு ஹோட்டல், ஒரு சிற்றுண்டிச் சாலை, வாடி வீடு எனின், அதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது குறித்த இடத்தில் அல்லது வளாகத்தில் 2022 ஆம் வருடத்தில் கிடைப்பனவுகளிலிருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணமாக 2023 ஆம் வருடத்திற்காக விதிக்கப்படுதல் வேண்டுமெனவும் ருவன்வல்லை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

தொ. இல.	*நிரல் I* *அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
01.	*குளிரூட்டல் இயந்திரம், குளிர் சாதனப் பெட்டி, அதி குளிர் சாதனப் பெட்டி சேவைகள் மற்றும் திருத்தஞ் செய்யும் இடமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
02.	*மின் கலங்களை மின்னூட்டல் நிலையம்*	*500.00*	*750.00*	*1000.00*
03.	*புடவைகளை நிறச்சாயமிடுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
04.	*நகைகள் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
05.	*கடிகாரங்களைத் திருத்தம் செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
06.	*வானொலிப் பெட்டி /தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் மின் உபகரணங்கள் திருத்தம்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்	*நிரல் II* தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
07.	மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00
08.	படங்களை சட்டகமிடும் இடமொன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
09.	உணவு வகைகள் மற்றும் உணவுகள் சம்பந்தமாக நடமாடும் வியாபாரமொன்றினை நடத்துதல்	500.00	750.00	1000.00
10.	வெடிப்பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
11.	எரிவாயு விற்பனை செய்யும் வியாபாரமொன்றினை நடாத்தல்	500.00	750.00	1000.00
12.	சவர்க்கார உற்பத்தி	500.00	750.00	1000.00
13.	படங்களை சட்டகமிடுதல்	500.00	750.00	1000.00
14.	தேயிலை பொதியிடல்	500.00	750.00	1000.00
15.	மின் உபகரணங்கள் திருத்தல்	500.00	750.00	1000.00
16.	கடிகாரங்கள் திருத்தம் செய்தல்	500.00	750.00	1000.00
17.	உலோக முலாம் பூசுதல்	500.00	750.00	1000.00
18.	டயர் டியுப் திருத்தம் செய்தல்	500.00	750.00	1000.00
19.	தொலைபேசி திருத்தம் செய்தல்	500.00	750.00	1000.00
20.	இயந்திரங்கள் மூலமான தச்சன் கம்மாலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
21.	இயந்திரங்கள் மூலம் மர ஆலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
22.	மோட்டார் வாகனம் திருத்தும் இடமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
23.	குடைசல் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
24.	குடைசல்/ஒட்டு வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
25.	அச்சகமொன்றை நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
26.	விவசாய மருந்துகள் மற்றும் உர விற்பணை வியாபாரமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
27.	கம்மாலை ஒன்றை நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
28.	சுருட்டு மற்றும் பீடி உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00

அட்டவணை - II

01.	தேநீர் கடை /கோப்பிக் கடைகளை நடாத்துதல்	350.00	500.00	750.00
02.	ஹோட்டல் ஒன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
03.	சிற்றுண்டிச் சாலையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
04.	சாப்பாட்டுக் கடையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
05.	பேக்கரியொன்றை (வெதுப்பகம்) நடாத்துதல்	500.00	750.00	1000.00
06.	விருந்தகம் மற்றும் உணவகமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
07.	மாட்டுப் பண்ணை மற்றும் பால் விற்பனை	500.00	750.00	1000.00
08.	மீன் விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட மீன்	500.00	750.00	1000.00
09.	இறைச்சி விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட இறைச்சி	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
10.	*இனிப்புப் பண்டங்கள் மற்றும் பைட் வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
11.	*மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
12.	*சலவைச் சாலையொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
13.	*சிகை அலங்கார நிலையமொன்றை நடாத்துதல்*			
	கிராமிய	*300.00*	*500.00*	*750.00*
	நகர	*500.00*	*750.00*	*1000.00*
14.	*விலங்குகளைக் கொல்லும் இடமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
15.	*சீமெந்து சார்ந்த உற்பத்திகள்*	*500.00*	*750.00*	*1000.00*
16.	*அரைக்கும் ஆலையொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
17.	*வாகனம் சேவை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
18.	*ஆடை தைக்கும் இடமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
19.	*குஷன் வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல்*	*350.00*	*500.00*	*750.00*
20.	*தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல்*	*500.00*	*750.00*	*1000.00*
21.	*அழகுபடுத்தும் இடமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
22.	*சலவை நிலையமொன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
23.	*தேயிலைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
24.	*காளான் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
25.	*ஐஸ்கிரீம் உற்பத்தி மற்றும் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
26.	*உடனடி உணவுப் பண்ட விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
27.	*ரேடியேட்டர் திருத்தம் செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
28.	*பால் சார்ந்த உற்பத்திகள்*	*500.00*	*750.00*	*1000.00*
29.	*இறைச்சி போக்குவரத்து செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
30.	*இலைக் கஞ்சி விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
31.	*கருவாடு விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
32.	*கேக் வகைகளின் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
33.	*பழச்சாறுகள் மற்றும் பழக்கலவைகளின் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
34.	*குடிநீர் போத்தல்களில் அடைத்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
35.	*உணவு வகைகளின் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
36.	*புகைப்பட நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
37.	*சவச்சாலைகளை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
38.	*குரோசறியொன்றை நடாத்திச் செல்லுதல்*	*500.00*	*750.00*	*1000.00*
39.	*கடதாசி உற்பத்திகள்*	*500.00*	*750.00*	*1000.00*
40.	*விழா நிகழ்ச்சிகளுக்காக உணவு மற்றும் குடிபானங்களை வழங்குதல்*	*500.00*	*750.00*	*1000.00*
41.	*தேங்காய் எண்ணெய் உற்பததி செய்யும் இடமொன்றை நடாத்துதல் செல்லல்*	*500.00*	*750.00*	*1000.00*
42.	*ஹைட்ரொலிக் குழாய்களைத் திருத்தம் செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
43.	*உலோகப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பொருத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
44.	*அலுமினியம் பிலாஸ்டிக் உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* *அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
45.	பொடி உற்பத்தி	500.00	750.00	1000.00
46.	ஒட்டுப் பலகை மற்றும் கம் உற்பத்தி	500.00	750.00	1000.00
47.	களஞ்சியசாலைப் பொருட்கள் மற்றும் அலுவலகப் பொருட்களின் உற்பத்தி	500.00	750.00	1000.00
48.	பப்படம் உற்பத்தி	500.00	750.00	1000.00
49.	கொங்கீட் பொருட்கள் உற்பத்தி செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல்	500.00	750.00	1000.00
50.	தேங்காய் எண்ணை உற்பத்தி	500.00	750.00	1000.00

12 - 244/4

ருவன்வெல்லை பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2023

ருவன்வெல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ- 19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்,

(அ) ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லையினும் ஏதேனுமொரு வளாகத்தில் நடாத்தப்படுகின்ற இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கைத்தொழில்களிற்காகவும் குறித்த அட்டவணையில் II ஆம் நிரலில் நேர் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான கைத்தொழில் வரியொன்றினை 2023 ஆம் வருடத்திற்காக விதித்து அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன்.

அட்டவணை

தொ. இல.	*நிரல் I* *அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
01.	*மரங்களில் செதுக்கல்களை மேற்கொள்ளும் கைத்தொழில்கள்*	*500.00*	*750.00*	*1000.00*
02.	*தும்புத்தடி, கூட்டுமாறு உற்பத்தி செய்யும் கைத்தொழில்*	*500.00*	*750.00*	*1000.00*
03.	*கை இயந்திரங்கள் மூலம் புடவைகளை நெய்யும் கைத்தொழில்*	*500.00*	*750.00*	*1000.00*
04.	*உள்நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
05.	*குளிர்பான உற்பத்தி மற்றும் விநியோகம்*	*500.00*	*750.00*	*1000.00*
06.	*ஸ்டிக்கர் மற்றும் பெயர் பலகை தயாரித்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
07.	*கித்துல் சார்ந்த கைத்தொழில்கள்*	*500.00*	*750.00*	*1000.00*
08.	*பாதணிகள் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
09.	*மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
10.	*விளம்பர அறிவித்தல் பலகை மற்றும் ஏனைய அறிவித்தல்கள் என்பவைகளை வரையும் இடமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
11.	*மெத்தை உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
12.	*ஊதுபத்திகள் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
13.	*இயந்திரங்களற்ற தச்சன் கம்மாலை*	*500.00*	*750.00*	*1000.00*
14.	*மெழுகுவர்த்தி உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
15.	*கருங்கல் வேலை நிலையமொன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
16.	*பித்தளைப் பொருட்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
17.	*அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
18.	*வாகன நிறம் பூசுதல் மற்றும் பார ஊர்தி மேற்பாகங்களை அமைக்கும் இடங்கள்*	*500.00*	*750.00*	*1000.00*
19.	*வார்ப்புக் கைத்தொழில்*	*500.00*	*750.00*	*1000.00*
20.	*பாணி /கருப்பட்டி உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
21.	*செங்கற் சூளை ஒன்றை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
22.	*சுண்ணாம்பு சார்ந்த உற்பத்திகளை செய்யுமிடமொன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
23.	*கடித உறைகள் மற்றும் ஏனைய உறைகளை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
24.	*அறிவித்தல் பலகை, பதாகைகள், போஸ்டர் போன்றவற்றை தயாரித்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
25.	*கம்மாலை (ஆயுத உற்பத்தி)*	*500.00*	*750.00*	*1000.00*
26.	*தும்பு சார்ந்த உற்பத்திகள்*	*500.00*	*750.00*	*1000.00*
27.	*இயந்திரங்கள் மூலம் கவிகை அடுக்குகள் (பீரலு) உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
28.	*குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
29.	*பேக் உற்பத்தி*	*500.00*	*750.00*	*1000.00*
30.	*நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
31.	*சுத்தம் செய்யும் பொருட்களை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
32.	*செல்லப் பிராணிகளை வியாபார நோக்கில் வளர்த்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
33.	*மீன் பிடி தூண்டில்களைத் தயாரித்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
34.	*விலக்குணவுகளை உற்பத்தி செய்யுமிடமொன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* அதிகாரம் வழங்கப்படுகின்ற விடயம்	*நிரல் II* தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
35.	வர்ண சீமெந்து உற்பத்தி	500.00	750.00	1000.00
36.	அரிப்பான், வாளி மற்றும் பால்வடி உற்பத்தி	500.00	750.00	1000.00
37.	விளக்குத் திரி உற்பத்தி	500.00	750.00	1000.00
38.	அலுமினியம் /பிலாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி	500.00	750.00	1000.00
39.	சுருட்டு மற்றும் பீடி உற்பத்தி செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
	அபாயகரமான மற்றும் அழகற்ற வியாபாரங்கள்			
01.	கோழி மற்றும் பன்றிப் பண்ணையொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
02.	துவிச்சக்கர வண்டி/மோட்டார் சைக்கில்/முச்சக்கர வண்டி தருத்தம் செய்தல்	500.00	750.00	1000.00
03.	டயர் மற்றும் டியுப் வொல்கனைஸ் பண்ணும் இடமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
04.	கை இயந்திரங்கள் மூலம் இறப்பர் உற்பத்தி செய்யும இடமொன்றை நடாத்துதல்	500.00	750.00	1000.00
05.	இறப்பர் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்			
06.	தோற் பண்டங்களை உற்பத்தி செய்யுமிடமொன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
07.	புடவைகளை நிறச்சாயமிடுதல்	500.00	750.00	1000.00
08.	விலங்குணவுகளை உற்பத்தி செய்தல்	500.00	750.00	1000.00

12 -244/5

ருவன்வெல்லை பிரதேச சபை

வியாபார வரி விதித்தல் - *2023*

ருவன்வல்லை பிரதேச சபையினால் *2022* ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் *22* ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ - *19* இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவில்,

(அ) (1) ஆம் உப பிரிவின் கீழ் ருவன்வெல்லை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 1987 ஆம் ஆண்டுன் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றிற்கு அல்லது குறித்த சட்டத்தின் 150 ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில் வரிக்கு உட்படாத ஏதேனுமொரு வியாபாரமொன்றினை ருவன்வல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2023 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்லுகின்ற அனைத்து நபர்களிடமிருந்தும் குறித்த வியாபாரத்தின் 2022 ஆம் ஆண்டின் வருமானம் இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயப் பரப்பினுல் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள அளவிலாள வியாபார வரியொன்றினை 2023 ஆம் வருடத்திற்காக விதித்தல் வேண்டுமெனவும்,

(ஆ) (3) ஆம் பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வரிக்கு உட்படுகின்ற அனைத்து நபர்களினாலும் மேலே கூறப்பட்ட வரியினை 2023, ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டுமெனவும் கட்டளையிடுவதற்கு ருவன்வெல்லை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை

	நிரல் I 2022 ஆம் வருடத்தில் வியாபாரத்தின் வருமானம்	நிரல் II ரூபா சதம்
01.	ரூ 6,000.00 அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்	எதுவும் இல்லை
02.	ரூ 6,000.00 விட அதிகரித்தும் ரூபா 12,000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்	90.00
03.	ரூ 12, 000.00 விட அதிகரித்தும் இருந்தும் ரூபா 18,750.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்	180.00
04.	ரூ 18, 750.00 விட அதிகரித்தும் இருந்தும் ரூபா 75, 000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்	360.00
05.	ரூ 75, 000.00 விட அதிகரித்தும் இருந்தும் ரூபா 150, 000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்	1200.00
06.	ரூ 150, 000.00 ஐ விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில்	3000.00

12 - 244/ 6

ருவன்வல்லை பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி விதித்தல் - 2023

ருவன்வெல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ - 19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செப்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ருவன்வெல்லை பிரதேச சபை எல்லைக்குள் காணப்படுகின்ற அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்காக குறித்த காணியின் மூலதனப் பெறுமதியின் 0.5% வீதமான வரியொன்றினை 2023 ஆம் வருடத்திற்காக விதித்து அறவிடுதல் வேண்டுமெனவும், குறித்த வரி விடயத்திற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153(1) (ஆ) பந்தியின் கீழான "விகிதாசாரம்"

ஆக குறித்த காணியின் கட்டடங்களினால் மூடப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் மொத்தக் காணியின் அளவிற்குமிடையிலான விகிதாசாரம் 1:5 ஆதல் வேண்டுமென கட்டளையிடுவதற்கு ருவன்வெல்லை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

12-244/7

ருவன்வெல்லை பிரதேச சபை

விண்ணப்பப்படிவக் கட்டணங்கள் மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்களை அறவிடுதல் - 2023

ருவன்வெல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ- 01 இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, ஒற்றோபர் 20.

தீர்மானம்

ருவன்வல்லை பிரதேச சபையினால் 2023, ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை விதிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

	ரூபா சதம்
01. வீதி எல்லை மற்றும் உரித்தளிக்காமை சான்றிதழ் கட்டணம்	1000.00
02. வீதி எல்லை மற்றும் உரித்தளிக்காமை சான்றிதழ் விண்ணப்பப் படிவக் கட்டணம்	100.00
03. இணக்கச் சான்றிதழ் விண்ணப்பப்படிவக் கட்டணங்களை அறவிடுதல்	100.00
04. கட்டட வரைபடங்களை அனுமதிக்கும் விண்ணப்பப்படிவக் கட்டணம் - நகர	750.00
நகரம் அல்லாத	400.00
05. காணியின் வரைபடத்தினை அனுமதிக்கும் விண்ணப்பப்படிவக் கட்டணம் - நகர	500.00
நகரம் அல்லாத	300.00
06. அபாயகரமான மரங்களை அகற்றுவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	
பலா மரத்தினை வெட்டுதல்	1000.00
பலா மரம் அல்லாத	500.00
07. ஆதன் வரி இடாப்பில் பெயர் மாற்றம் செய்யும் விண்ணப்பப்படிவக் கட்டணம்	100.00
08. ஆதன் வரி அறிக்கைகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள்	500.00
09. ஆதன் வரி செலுத்துவதாக சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணம்	100.00
10. புதிய ஆதன வரி இலக்கம் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	100.00
11. புதிய ஆதன வரி இலக்கம் வழங்குவதற்கான கட்டணம்	500.00
12. இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்	

- அதிர்வு இயந்திரம் (தட்டு) நடத்துனருடன் ஒரு நாளைக்கு - ரூபா 8000.00
- அதிர்வு இயந்திரம் (உருளை 1 1/2 டொன்) ஒரு நாளைக்கு 8 மணி நேர சேவை மற்றும் வாகன கூலி, எரிபொருள், நாள் சம்பளம் என்பனவற்றுடன் - ரூபா 12000.00
- பேகோ இயந்திரம் (JCB) - மீற்றர் ஒரு மணித்தியாலத்திற்கு - ரூபா 6000.00 (ஆக குறைந்தது 2 மணித்தியாலத்திற்கான சேவை கட்டணம் அறவிட வேண்டும்)

- மோடர் கேடர் இயந்திரம் கூலி அடிப்படையில் வழங்கும் போது - மீற்றர் ஆறு மணித்தியாலத்திற்கு மேல் அதிகரிக்கும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் - ரூபா 7000.00 மும் மீற்றர் ஆறு மணித்தியாலயத்திற்கும் குறைந்த காலத்திற்கு (மீற்றர் ஆறு மணித்தியாலயம் வரை) கட்டணம் ரூபா 6500.00 X 06 பெற்றுக்கொள்ளும் போது ரூபா 39000.00 ஆகும்.
- மோடர் கேடர் இயந்திரம் அதிகபட்சம் 10 நாற்களுக்கே வழங்கப்படும், அதற்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது
- மோடர் கேடர் இயந்திரம் 10 நாற்களுக்கே மேல் வழங்கப்படுமாயின் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்

- நீர்த் தாங்கி (பெரியது) 6000 ம் லீற்றர் (நீர் அற்ற) - பிரதேச சபை எல்லைக்குள் செல்வதற்காக - ரூபா 9000.00
  பிரதேச சபை எல்லைக்குள் வெளியில் செல்வதற்காக - ரூபா 11000.00
  போக்குவரத்து செலவு ஒரு கிலோ மீற்றறுக்கு போவதற்கும் வருவதற்கும் ரூபா - 350.00 கட்டணமாக அறவிடப்படும்

- தாங்கி (சிறிய) - 3300 லீற்றர் (நீர் அற்ற)
  பிரதேச சபை எல்லைக்குள் செல்வதற்காக - ரூபா 4000.00
  பிரதேச சபை எல்லைக்குள் வெளியில் செல்வதற்காக - ரூபா 5000.00
  போக்குவரத்து செலவு ஒரு கிலோ மீற்றறுக்கு போவதற்கும் வருவதற்கும் ரூபா 350.00 கட்டணமாக அறவிடப்படும்

- மலத் தாங்கி (3000 ம் லீற்றர்) ஒரு வேலைக்கு
  I. ஆதன வரி எல்லைக்குள் - ரூபா 8500.00
  II. பிரதேச சபை எல்லைக்குள் - ரூபா 10000.00
  III. பிரதேச சபை எல்லைக்கு வெளியில் - ரூபா 11500.00

- மலத் தாங்கி (4000 ம் லீற்றர்) ஒரு வேலைக்கு
  I. ஆதன வரி எல்லைக்குள் - ரூபா 8500.00
  II. பிரதேச சபை எல்லைக்குள் - ரூபா 10000.00
  III. பிரதேச சபை எல்லைக்கு வெளியில் - ரூபா 11500.00

- இதல்பொல கழிவுநீர் அமைப்பு மீட்பு கட்டணம் - ரூபா 2000.00

  போக்குவரத்து செலவு ஒரு கிலோ மீற்றறுக்கு போவதற்கும் வருவதற்கும் ரூபா - 350.00 கட்டணமாக அறவிடப்படும்

- டிப்பர் வண்டிக்கான கட்டணம்
- 3 கியுப் டிப்பர் வண்டி 15 கி. மீற்றரை விடக் குறைவான எந்தவொரு தூரத்திற்கும் ரூபா 9000.00 ஆகும்.
  (அதனை விட அதிகரிக்கின்ற ஒவ்வொரு கிலோ மீற்றரிட்கும் - ரூபா 350.00 கட்டணமாக அறவிடப்படும்)

- பிளாஸ்டிக் கதிரை - ஒரு கதிரைக்கு ரூபா 20.00 ஆகும்
  (தொலைந்தால் கதிரையின் பெறுமதி அறவிடப்படும்)

- கொடிக் கம்பம் - ஒரு நாளைக்கு ரூபா 30.00 ஆகும்.
  (கொடிக்கம்பங்களை பெற்றுக்கொள்ளும் போது ரூபா 3000.00 வைப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். வழிபாட்டுத் தளங்கள், அரச நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதோடு தொலைந்தால் கம்பத்தின் தற்போதைய சந்தை பெறுமதியும் மற்றும் அதன் 5% மும் அறவிடப்படும்).

- பௌத்த கொடி - (ஒரு நாளைக்கு ஒரு பௌத்த கொடிக்கு ரூபா. 20.00 ஆகும்)
  (வழிபாட்டு தளங்கள், அரச நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதோடு தொலைந்தால் அல்லது பழுதடைந்தால் கொடியின் பெறுமதியினை செலுத்துதல் வேண்டும்).

- தேசிய கொடி - (ஒரு நாளைக்கு ஒரு தேசிய கொடிக்கு ரூபா 20.00 ஆகும்)
  (வழிபாட்டுத் தளங்கள், அரச நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதோடு தொலைந்தால் அல்லது பழுதடைந்தால் கொடியின் பெறுமதியினை செலுத்துதல் வேண்டும்.)

- ப்லாஷ் விளக்கு - ரூபா 1000.00
(ப்லாஷ் விளக்குகளுக்காக மூன்று நாளைக்கு ரூபா 1000.00 வீதமும், அதிகரிக்கின்ற ஒவ்வொரு நாளைக்கும் ரூபா 200.00 வீதமும் அறவிடப்படும். அதிகார எல்லைக்குள் மரண வீடுகள் மற்றும் மத வழிபாட்டுத் தளங்களிற்கு இலவசமாக வழங்கப்படும்).

13. 2023 ஆம் வருடத்திற்காக நகரம் அல்லாத பிரதேசங்களின் கட்டணங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற முன் விதிக்கப்பட்ட கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறவிடப்படும்.

கட்டத்தின் நில அளவு		வசிப்பிடக் கட்டடங்களிற்காக			வியாபார /ஏனைய கட்டடங்களிற்காக		
சதுர மீற்றர்	சதுர அடி	கட்டணம்	ரூபா	சதம்	கட்டணம்	ரூபா	சதம்
45 குறைய	500 குறைய		500	. 00		1000	. 00
46 - 90	501 - 1000		1200	. 00		1750	. 00
91 - 180	1001 - 2000		2000	. 00		2750	. 00
181 - 270	2001 - 3000		3000	. 00		3500	. 00
271 - 450	3001 - 5000		4000	. 00		5000	. 00
451 - 675	5001 - 7500		4500	. 00		6500	. 00
676 - 900	7501 - 10000		5500	. 00		7000	. 00
900 மேல்	10000 மேல்		6500	. 00		11,000	. 00
		m^2 100 இற்கு மேற்படுகின்ற அனைத்து m^2 இற்கும் ரூபா 500.00 வீதம் அறவிடுதல் வேண்டும்			m^2 100 இற்கு மேற்படுகின்ற அனைத்து m^2 இற்கும் ரூபா 1000.00 வீதம் அறவிடுதல் வேண்டும்		

14. நகர பிரதேசத்திற்கு வெளியில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சேவைக் கட்டணங்களை அறவிடுதல்

அபிவிருத்திப் பணியின் தன்மை	அறவிடப்படவேண்டிய கட்டணம்	
	வீட்டிற்கு (1 சதுர மீற்றருக்கான கட்டணம்)	வர்த்தக மற்றும் ஏனைய (1 சதுர மீற்றருக்கான கட்டணம்)
உரிய அனுமதிப்பத்திரமின்றி கட்டிடங்களை நிர்மாணித்தல் / பகுதிகளை ஒன்று சேர்த்தல் /மீள் நிர்மாணம் செய்தல்		
1. நிர்மாணிப்புக் கட்டம்		
• அத்திவார வேலை மாத்திரம் (DPC மட்டம்) பூரணப்படுத்தப்பட்டிருக்கும்போது	100.00	300.00
• கூரை மட்டம் வரையில் (கூரை இன்றி) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் போது	200.00	500.00
• கூரையுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் போது	300.00	1000.00
• பூரணமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் போது	400.00	1500.00
2. எல்லை மதில் /பாதுகாப்பு மதில் நிர்மாணித்தல் (நீள அடி)	200.00	300.00
3. காணி /வயல்களை நிரப்புவதற்காக	ஒவ்வொரு 150 சதுர மீற்றரிற்கும் ரூபா 5000.00 வீதம்	

அபிவிருத்திப் பணியின் தன்மை	அறவிடப்படவேண்டிய கட்டணம்	
	வீட்டிற்கு (1 சதுர மீற்றருக்கான கட்டணம்)	வர்த்தக மற்றும் ஏனைய (1 சதுர மீற்றருக்கான கட்டணம்)
4. தொலைபேசி /தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்காக	உயரம் ஒவ்வொரு 5 மீற்றரிக்கும் ரூபா 10000.00 வீதம்	
5. விஷேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	ஒவ்வொரு 05 மில்லியன்களுக்கும் ரூபா 10000.00 வீதம்	
6. குடிபுகு சான்றதழின்றி வசித்தல் /உபயோகித்தல் அல்லது பாவனைக்கு எடுத்தல்	ஒரு நாளைக்கு ரூபா 25.00 வீதம்	

15. பாதுகாப்பு வேலிகளுக்காக முன் நியமிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல்

	வசிப்பிடக் கட்டடங்களிற்காக			வியாபார /ஏனைய கட்டடங்களிற்காக		
	கட்டணம்	ரூபா	சதம்	கட்டணம்	ரூபா	சதம்
கட்டட எல்லைக்கு வெளியில்		200	. 00		300	. 00
கட்டட எல்லைக்குள்		300	. 00		400	. 00

16. குடிபுகு சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணங்களை அறவிடுதல்

அபிவிருத்திப் பணியின் தன்மை	அறவிடப்படவேண்டிய கட்டணம்
1. நில துணைப்பிரிவு	முதலாவது நில துண்டிற்கு ரூபா 1000.00 மற்றும் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு நில துண்டிற்கும் ரூபா 500.00 வீதம் அறவிடப்படும்
2. குடியிருப்பு கட்டுமானம்	சதுர மீற்றரிற்கும் 300 விட துறைந்ததற்கு ரூபா 3000.00 மற்றும் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு சதுர மீற்றரிற்கும் ரூபா 10.00 வீதம் அறவிடப்படும்
வணிக மற்றும் ஏனைய கட்டுமானம்	சதுர மீற்றரிற்கும் 100 ஐ விட குறைந்ததற்கும் ரூபா 3000.00 மற்றும் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு சதுர மீற்றரிற்கும் ரூபா 20.00 வீதம் அறவிடப்படும்
3. எல்லை மதில் /பாதுகாப்பு மதில் நிர்மாணித்தல்	முதல் 100 மீற்றர் நீளத்திற்கு ரூபா 1000.00 மற்றும் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு மீற்றரிற்கும் ரூபா 10.00 வீதம் அறவிடப்படும்
4. காணி/வயல்களை நிரப்புவதற்காக	சதுர மீற்றரிற்கும் 150 விட துறைந்ததற்கு ரூபா 3000.00 மற்றும் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு சதுர மிற்றரிற்கும் ரூபா 20.00 வீதம் அறவிடப்படும்
5. தொலைபேசி/தொலைத்தொடர்புக் கோபுரங்களிற்காக	உயரம் மீற்றர் 5 தொடக்கம் 20 வரை ரூபா 2000.00 மற்றும் அதற்கு கோபுரங்களிற்காக மேலதிகமான ஒவ்வொரு மீற்றரிற்கும் ரூபா 100.00 வீதம் அறவிடப்படும்
6. விஷேட கருத்திட்டங்கள்	சிறிய அளவிற்கு ரூபா 5000.00 மத்திய அளவிற்கு ரூபா 10000.00 பொரிய அளவிற்கு ரூபா. 20000.00

17 . ருவன்வெல்லை பொது விளையாட்டு மைதானத்தினை வழங்குவதற்காக நாளாந்தக் கட்டணங்களை அறவீடு செய்தல் கீழே குறிப்பிட்டுள்ளவாறாகும்.

தொடர் இலக்கம்	விடயம்	பணம் அறவிடுதல்			
		விளையாட்டு மைதானத்திற்காக		கைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்திற்காக	
		பகற் பொழுது மு.ப. 7.00 முதல் பி.ப. 5.00 வரை	இரவுக் காலம் பி.ப. 6.00 முதல் அடுத்த நாள் மு.ப. 6.00 வரை	பகற் பொழுது மு.ப. 7.00 முதல் பி.ப. 5.00 வரை	இரவுக் காலம் (பூரண ஒளியுடன்) பி.ப. 6.00 முதல் அடுத்த நாள் மு.ப. 6.00 வரை
01.	உள்ளூராட்சித் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட விஷேட விளையாட்டு நிகழ்ச்சிகள்	நாளாந்தக் கட்டணம் - இலசவம் வைப்புக் கட்டணம் - இலவசம்	இலவசம் இலவசம்	இலவசம் இலவசம்	இலவசம் இலவசம்
02.	விளையாட்டு அமைச்சு (மத்திய /மாகாண) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக ஏற்பாடு செய்யப்படுகின்ற விஷேட விளையாட்டு நிகழ்ச்சிகள்	இலவசம் இலவசம்	இலவசம் இலவசம்	இலவசம் இலவசம்	இலவசம் இலவசம்
03.	ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் சகோதர அரச /அரை அரச நிறுவனங்களின் விஷேட விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக	நாளாந்தக் கட்டணம் - இலசவம் வைப்புக் கட்டணம் ரூபா 5000.00	இலவசம் ரூபா. 5000.00	இலவசம் இலசவம்	இலவசம் ரூபா 5000.00
04.	ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லையில் விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் உற்பட பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களினூடாக ஏற்பாடு செய்யப்படுகின்ற விஷேட விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக	நாளாந்தக் கட்டணம் ரூபா 3000.00 வைப்புக் கட்டணம் ரூபா 5000.00	ரூபா 5000.00 ரூபா 5000.00	இலவசம் இலவசம்	ரூபா 10000.00 ரூபா 5000.00

தொடர் இலக்கம்	விடயம்	பணம் அறவிடுதல்			
		விளையாட்டு மைதானத்திற்காக		கைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்திற்காக	
		பகற் பொழுது மு.ப. 7.00 முதல் பி.ப. 5.00 வரை	இரவுக் காலம் பி.ப. 6.00 முதல் அடுத்த நாள் மு.ப. 6.00 வரை	பகற் பொழுது மு.ப. 7.00 முதல் பி.ப. 5.00 வரை	இரவுக் காலம் (பூரண ஒளியுடன்) பி.ப. 6.00 முதல் அடுத்த நாள் மு.ப. 6.00 வரை
05.	ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லையில் வெளியில் உள்ள சகோதர அரச/அரை அரச நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்ற விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக	நாளாந்தக் கட்டணம் ரூபா 3000.00 வைப்புக் கட்டணம் ரூபா 5000.00	ரூபா 6000.00 ரூபா 5000.00	ரூபா 3000.00 ரூபா 5000.00	ரூபா 10000.00 ரூபா 5000.00
06.	தெஹிஓவிட்ட கல்வி வலயத்தினுள் பாடசாலைகள் மற்றும் கல்வி காரியங்களின் விஷேட விளையாட்டு நிகழ்ச்சிகள்	நாளாந்தக் கட்டணம் ரூபா 3000.00 வைப்புக் கட்டணம் ரூபா 5000.00	ரூபா 3000.00 ரூபா 5000.00	ரூபா 3000.00 ரூபா 5000.00	ரூபா 5000.00 ரூபா 5000.00
07.	தனியார் நிறுவனங்களின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற விஷேட விளையாட்டு நிகழ்வுகள்	நாளாந்தக் கட்டணம் ரூபா. 12500.00 வைப்புக் கட்டணம் ரூபா. 5000.00	ரூபா 15000.00 ரூபா 5000.00	ரூபா 7500.00 ரூபா 5000.00	ரூபா 10000.00 ரூபா 5000.00
18 . எபவெவ விளையாட்டு மைதானத்தினை வழங்குவதற்காக நாளாந்தக் கட்டணங்களை அறவீடு செய்தல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்					
08.	களியாட்டங்கள் மற்றும் இசைக் கச்சேரிகளுக்காக வழங்குவதாயின் மாத்திரம்	நாளாந்தக் கட்டணம் ரூபா. 75000.00 வைப்புக் கட்டணம் ரூபா. 1250.00	ரூபா 12500.00 ரூபா 1250.00	-	-

கவனிக்க :

வைப்புத் தொகையாக அறவிடப்படுகின்ற தொகை போட்டியின் இறுதியில் விளையாட்டு மைதான பொறுப்பாளரின் அறிக்கையின் பிரகாரம் விளையாட்டு மைதானத்திற்கு எந்த வித நட்டமும் ஏற்படாத விடத்து, வைப்புச் செய்யப்பட்ட மொத்தத் தொகையையும் மீளச் செலுத்துவதற்கும், நட்டமேதும் ஏற்பட்டிருப்பின் சேதத்தினை பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலர் மூலம் மதிப்பீட்டு செய்து குறித்த தொகையை வைப்புப் பணத்திலிருந்து அறவீடு செய்து கொண்டதன் பின் எஞ்சிய தொகையை மீளச் செலுத்துவதற்கும், வைப்புத் தொகையை விட கூடுதலான சேதமொன்று ஏற்பட்டிருப்பின் தொழில்நுட்ப அலுவலரின் அறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட தரப்பினர் குறித்த தொகையை சபைக்கு செலுத்துவதற்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

18. கொம்போஸ்ட் பசளை விற்பணை செய்தல்

- 1 kg முதல் 99 kg வரை ரூபா 25.00
- 100 kg இற்கு மேலதிக மொத்த விலை ரூபா 20.00

19. தகனம் செய்யுமிடம் மற்றும் மயான பூமியினை வழங்குவதற்காக கட்டணங்களை அறவிடுதல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாராகும்

01.	அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற ஒருவரின் பிரேதமொன்றினை தகனம் செய்வதற்காக	ரூபா 12000.00
02.	அதிகார எல்லைக்கு வெளியில் வசிக்கின்ற ஒருவரின் பிரேதமொன்றினை தகனம் செய்வதற்காக	ரூபா 14000.00
03.	நல்லடக்கம் செய்வதற்கான கட்டணம்	ரூபா 200.00

20. சாலை சேதம் செய்தலுக்கான கட்டணம்

சாலை சேதம் செய்தலுக்காக அனுமதி வழங்கும் போது ரூபா 2500.00 வைப்புத் தொகையாக செலுத்துதல் வேண்டும்.
மீள செலுத்தப்படாத தொகையாக ரூபா 1000.00 செலுத்த வேண்டும்.

12 - 244/8

රුවන්වෙල්ලෙ பிரதேச சபை

காணிகள் விற்பனை மீது வரி அறவிடுதல் - 2023

රුවන්වෙල්ලෙ பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ -19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
රුවන්වෙල්ලෙ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
රුවන්වල්ලෙ,
2022, செத்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 154 (1) ஆம் பிரிவின் கீழ் රුවන්වෙල්ලෙ பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப රුවන්වෙල්ලෙ பிரதேச சபையின் எல்லைக்குள் காணப்படுகின்ற ஏதேனும் ஒரு காணிகள் ஏல விற்பனையாளரொருவர் அல்லது தரகர் ஒருவர் அல்லது அவரின் உதவியாளர் ஒருவர் அல்லது முகவர் ஒருவர் மூலம் பிரதித்த ஏலத்தில் அல்லது வேறுஏதேனும் ஒரு விதத்தில் விற்பனை செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் குறித்த காணியினை

விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற தொகையில் 1% இற்கு சமமான வரியினை விற்பனையாளர் அல்லது ஏலவிற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரின் முகவரினால் ருவன்வெல்லை பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டுமென ருவன்வெல்லை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

(இவ்வரியினைச் செலுத்துதல் சம்பந்தப்பட்ட வருடம் முடிவுறுவதற்கு முன் செலுத்தப்பட வேண்டுமெனவும் வரிக்கு மேலதிகமாக அரசினால் விதிக்கப்படுகின்ற வரிகள் அறவிடப்படும்)

12- 244/9

ருவன்வெல்லை பிரதேச சபை

விளம்பர அறிவித்தல்கள்/கட்புலன் சூழல் சம்பந்தமான துணைச் சட்டம் - 2023

ருவன்வெல்லை பிரதேச சபையினால் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ -19 இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிதல் சபை அங்கீகாரம் பெறப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

என். சமன் குலசூர்ய,
தலைவர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வல்லை,
2022, செத்தெம்பர் 22.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் இலக்க (1) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப 1988.08.23 ஆந் திகதி கொண்ட 520/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணங்கள் கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியம துணைச் சட்டத்தில் 39 ஆம் பிரிவில் விளம்பர அறிவித்தல்கள்/கற்புலன் சூழல் சம்பந்தமான துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் எவையேனும் ஒரு வீதியில், பாதையில், ஓடைக்கு, குளத்திற்கு, கடலிற்கு அல்லது வானிற்கு தெரியும் விதமாக விளம்பரம் ஒன்றை காட்சிப்படுத்துவதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரக் கட்டணமொன்றை 2023 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றது.

அட்டவணை

		ரூபா சதம்
01.	ஒரு சுவரில் அல்லது பலகையில் மரம் அல்லது கல்வனைஸ் குழாய்களை இட்டு அல்லது கொங்ரீட் தூண்களில் பொறுத்தப்படுகின்ற நிலையான விளம்பர அறிவித்தல் பலகையொன்றிற்காக ஒரு சதுர அடிக்கு ஒரு வருடத்திற்கு	100.00
02.	புடவையில் வரையப்பட்ட அல்லது டிஜிடல் அச்சு மூலம் தயாரிக்கப்பட்ட ஏனைய எவையேனும் பதாகை ஒன்றை காட்சிப்படுத்துவதற்காக ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு	50.00

12-244/10

பெல்மடுள்ள பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2023

பெல்மடுள்ள பிரதேச சபையில் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத் தொடரின் தீர்மான இலக்கம் 05-i இன் கீழ், கீழ்க் காணப்படும் தீர்மானம், சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்டுள்ள மதிப்பீட்டு வரியை சகல காலாண்டிற்கும் சமனான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் வருடத்துக்கான முழு வரி மதிப்பீட்டுத் தொகையையும், 2023, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னதாக ஒரே முறையில் செலுத்தினால், மொத்த மதிப்பீட்டுத் தொகையில் பத்து (10%) தள்ளுபடியும், மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்கு முரிய மதிப்பீட்டுத் தொகை, குறித்து காலாண்டின் முதல் மாதத்தின் இறுதி தினத்துக்கு முன்னதாக செலுத்தப்படுமானால் ஐந்து (5%) தள்ளுபடியும் வழங்கப்படும்.

எச். ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன,
தலைவர்,
பெல்மடுள்ள பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெல்மடுள்ள,
2022, நவெம்பர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்ட மூலத்தில் 146 வது வாசகத்தின் (1) வது துணை வாசகத்தின் பிரகாரம், பெல்மடுள்ள பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்ட, வளர்ச்சியடைந்த கிராமங்களாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கான 2022 ஆம் வருடத்தின் வருடாந்த மதிப்பு 2023 ஆம் வருடத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்படி, பிரதேச சபை சட்டமூலத்தின் 134 ஆவது வாசகத்தின் துணை வாசகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மேற் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த பெறுமதியில்,

(1) பெல்மடுள்ள பிரதேச சபை தலைமை காரியாலய அதிகார பிரதேசத்திற்குள், வளர்ச்சியடைந்த கிராமங்களாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் மீதும் ஆறு (6%) மதிப்பீட்டு வரியும்,

(2) பெல்மடுள்ள பிரதேச சபையின் மாரபன உப காரியாலய பிரதேசத்திற்குள் வளர்ச்சியடைந்த கிராமங்களாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து அசையா சொத்துக்கள் மீதும் நான்கு (4%) மதிப்பீட்டு வரியும், 2023 ஆம் ஆண்டுக்காக விதிப்பதற்கும்,

அம் மதிப்பீட்டு வரி, பிரதேச சபைச் சட்டமூலத்தின் 134 ஆவது வாசகத்தின் (6) ஆவது வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ், அவ்வருடத்தின் மார்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவடையும் நான்கு காலாண்டுக்குள், சமனான நான்கு தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும் என கட்டளையிட பெல்மடுள்ள பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

12-305/1

பெல்மடுள்ள பிரதேச சபை

ஏக்கர் வரி விதித்தல் - 2023

பெல்மடுள்ள பிரதேச சபையில் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத் தொடரில் தீர்மான இலக்கம் 05-ii இன் கீழ், கீழ்க்காணப்படும் தீர்மானம், சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்டுள்ள ஏக்கர் வரியை சகல காலாண்டிற்கும் சமனான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்தல் வேண்டும் என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் வருடத்துக்கான முழு ஏக்கர் வரியையும், 2023, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னதாக ஒரே முறையில் செலுத்தினால், மொத்த மதிப்பீட்டுத் தொகையில் பத்து (10%) தள்ளுபடியும், மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 எனும் திகதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குரிய ஏக்கர் வரி, குறித்து காலாண்டின் முதல் மாதத்தின் இறுதி தினத்துக்கு முன்னதாக செலுத்தப்படுமானால் ஐந்து (5%) தள்ளுபடியும் வழங்கப்படும்.

எச். ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன,
தலைவர்,
பெல்மடுள்ள பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெல்மடுள்ள,
2022, நவெம்பர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டமூலத்தின் 134 வது வாசகத்தின் (3) ஆவது துணை வாசகத்தின் மூலம் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், பெல்மடுள்ள பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குள் அமைந்திருந்தாலும், மேற்கூறப்பட்ட சட்ட மூலத்தின் 135 ஆவது வாசகத்தின் கீழ், ஏக்கர் வரி விலக்களிக்கப் படவில்லையெனவும், நிரந்தர அல்லது வழக்கமான சாகுபடியின் கீழ்

(அ) ஹெக்டயார் 5 ற்கு அல்லது அதனை விட அதிகமான எந்தவொரு இடத்திற்கும், அந்த இடத்தில் ஒவ்வொரு ஹெக்டேயரிற்கும் 2023 ஆம் ஆண்டில் 10 ரூபா வீதம் வருடாந்த ஏக்கர் வரி விதிக்கவும்,

(ஆ) மேற்கூறப்பட்ட சட்ட மூலத்தின் 134 வது வாசகத்தின் (3வது) துணை வாசகத்தின் இடைக்கால சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பான கௌரவ அமைச்சர், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் iv(ஆ) வது பகுதியில் 1989.02.03 ஆந் திகதிட்ட வர்த்தமானி அறிவிப்பில் பெல்மடுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினை விசேட பிரதேசமாக அறிவித்துள்ளமையினால், ஒரு ஹெக்டேயாருக்கு கூடுதலாக ஆனால் ஐந்து ஹெக்டேயரிற்கு குறைவானதுமான அனைத்து காணிகளுக்கும் 2023 ஆம் ஆண்டில் 50.00 ரூபா வீதம் வருடாந்த ஏக்கர் வரி அறவிடுவதற்கும்,

(இ) பிரதேச சபை சட்ட மூலத்தின் 134 வது வாசகத்தின் (6) வது உப வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவ்வருடத்தின் மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 எனும் திகதிகளுக்கு முன் சமமான நான்கு தவணைகளில் செலுத்துப்படல் வேண்டும் என கட்டளையிட தீர்மானித்துள்ளது.

12-305/2

பெல்மடுள்ள பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2023

பெல்மடுள்ள பிரதேச சபையில் 2022 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தொடரின் தீர்மான இலக்கம் 05-iii இன் கீழ், கீழ்க்காணப்படும் தீர்மானம், சபையினால் ஏற்றக்கொள்ளப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் வரி அந்த வருடத்தில் ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபை காரியாலயத்திற்கு செலுத்தப்படல் வேண்டுமென்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எச். ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன,
தலைவர்,
பெல்மடுள்ள பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெல்மடுள்ள,
2022, நவெம்பர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின் 150 வது வாசகத்தின் (1) வது துணை வாசகத்தின் கீழ், பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப் பிரகாரம் பெல்மடுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நடாத்திச் செல்லப்படும், கீழ்க்குறிப்பிட்டுள்ள I ஆவது உப பட்டியலில் உள்ள கைத்தொழில்களுக்காக, II ஆவது நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலும் செயற்படும் இடத்தின் வருடாந்த பெறுமதிக்கேற்ப, நேரொத்த கோட்டில் காட்டப்பட்டுள்ள வரியினை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கும், அவ்வரியினை செலுத்த வேண்டிய ஒவ்வொரு நபரும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பெல்மடுள்ள பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்றும் தீர்மானித்துள்ளது.

அட்டவணை

நிரல் I		நிரல் II		
தொ. இல.	கைத்தொழில் வரி	தொழில் நடாத்துப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச.
1	தங்கஆபரண உற்பத்தி அல்லது விற்பனை	500.00	750.00	1,000.00
2	கட்டடத் தொழில்	500.00	750.00	1,000.00
3	அலங்காரப் பொருள் உற்பத்தி, விற்பனை	500.00	750.00	1,000.00
4	சில்லறைப் பொருள்/கசாயப் பொருள்/மருந்துப் பொருள் பக்கட்டில் அடைத்தல்	500.00	750.00	1,000.00
5	படச் சட்டகம் தயாரித்தல்	500.00	750.00	1,000.00
6	மட்பாண்ட பொருள் தயாரிப்பும் விற்பனையும்	500.00	750.00	1,000.00
7	செயற்கை பூ நிர்மாணமும், விற்பனையும்	500.00	750.00	1,000.00
8	தொலைக்காட்சி என்டனா தயாரிப்பும் விற்பனையும்	500.00	750.00	1,000.00
9	தானிய விதைகள் பொதி செய்தல்	500.00	750.00	1,000.00
10	தேயிலைப்பெட்டி அல்லது பலகைப்பெட்டி தயாரிப்பு	500.00	750.00	1,000.00
11	கடித உறை அல்லது வேறு உறை தயாரிப்பு	500.00	750.00	1,000.00
12	மெத்தை உற்பத்தி	500.00	750.00	1,000.00
13	ஊதுபத்தி தயாரிப்பு	500.00	750.00	1,000.00
14	பை வகை (பேக்) தைத்தலும் விற்றலும்	500.00	750.00	1,000.00
15	கடிகார புதுப்பிப்பு	500.00	750.00	1,000.00
16	பித்தளைப் பொருட்கள் தயாரித்தலும் விற்பனை	500.00	750.00	1,000.00
17	ஆடைகள் தைத்தல்	500.00	750.00	1,000.00
18	ஸ்டிக்கர் வெட்டுதல், அறிவித்தல், பெயர்ப் பலகை தயாரித்தல்	500.00	750.00	1,000.00
19	சாவி வெட்டுதல், சீல் செய்தல்	500.00	750.00	1,000.00

பெல்மடுள்ள பிரதேச சபை

வியாபார வரி விதித்தல் - 2023

பெல்மடுள்ள பிரதேச சபையில் 2022 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத் தொடரில் தீர்மான இலக்கம் 5-iv இன் கீழ், கீழ்க்காணப்படும் தீர்மானம், சபையினால் ஏற்றக்கொள்ளப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டுக்கான வியாபார வரியினை அந்த வருடத்தில் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை காரியாலயத்திற்கு செலுத்தல் வேண்டுமென்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எச். ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன,
தலைவர்,
பெல்மடுள்ள பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெல்மடுள்ள,
2022, நவெம்பர் 15.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டமூலத்தின 152 ஆவது வாசகத்தின் (1) வது துணை வாசகத்தின் கீழ் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப் பிரகாரம், அந்த சட்ட மூலத்தின் அல்லது அச்சட்ட மூலத்தின் இடைச்சட்டவாக்கத்தின் கீழ் அனுமதி பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள, அல்லது அச்சட்டமூலத்தின் 150 ஆவது வாசகத்தின் கீழ் கைத்தொழில் வரி செலுத்துதல் அவசியமற்ற மற்றும் சீவனோபாயமல்லாத ஏதாவதொரு வியாபாரத்தை கஹவத்தை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்டு 2023 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்கின்ற ஒவ்வொரு நபரிடமும், அவரது வியாபரத்தின் முன்னைய வருடத்தின் வருமானம், இங்கு கீழ் உப பட்டியலின் முதாலாவது நிரலில் குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு பாடநெறி எல்லைக்குட்பட்ட இடத்தில் நடத்தும் சந்தர்ப்பத்தில் (ii) ஆவது நிரலில் நேரொத்த கோட்டில் காட்டப்பட்டுள்ள வியாபார வரியை, 2023 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கும், வரிக்குட்பட்ட எவராயினும் அவரது வியாபார வரியை 2023, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பெல்மடுள்ள பிரதேச சபைக்கு செலுத்தல் வேண்டும் என்றும் தீர்மானித்துள்ளது.

அட்டவணை I

I ஆம் நிரல்	*II ஆம் நிரல்*
வரிக்கு முந்திய ஆண்டில் வியாபாரத்தின் வருமானம்	*செலுத்தப்பட வேண்டிய வரி ரூபா ச.*
1. ரூபா 6,000.00 இற்கு குறைவடையாத சந்தர்ப்பம்	*இல்லை*
2. ரூபா 6,000.00 இற்கு மேற்பட்டதும் ரூபா 12,000.00 இற்கு குறைவடையாத	*90.00*
3. ரூபா 12,000.00 இற்கு மேற்பட்டதும் ரூபா 18,750.00 இற்கு குறைவடையாத	*180.00*
4. ரூபா 18,750.00 இற்கு மேற்பட்டதும் ரூபா 75,000.00 இற்கு குறைவடையாத	*360.00*
5. ரூபா 75,000.00 இற்கு மேற்பட்டதும் ரூபா 1,50,000.00 இற்கு குறைவடையாத	*1,200.00*
6. ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட	*3,000.00*

பெல்மடுள்ள பிரதேச சபை

ஏந்தவொரு கைத்தொழிலை நடாத்திச் செல்வதாயின், சம்பந்தப்பட்ட இடைக்கால சட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டுக்காக வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தின் மீதான கட்டணம் விதித்தல் - 2023

பெல்மடுள்ள பிரதேச சபையில் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத் தொடரில் தீர்மான இலக்கம் 5-v இன் கீழ், கீழ்க்காணப்படும் தீர்மானம், சபையினால் ஏற்றக்கொள்ளப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

